[டாக்டர் மு. கருணாநிதி] [1990 சனவரி 25

என்பதற்காகத்தான் இப்போது எதிர்கட்சித் தலைவராகவே ஆகி இருக்கிறார். நான் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. ஒரு விஷயத்தைச் சொல்லும்போது அதிலே உள்ள விவகாரத்தைப் பற்றிச் சொல்லவேண்டும். திரு. அர்ஜுனன் அவர்கள் குறிப்பிட்ட எண்கள் காருக்குரிய எண்கள் அல்ல. அது டிராக்டருக்கும், ஸ்கூட்டருக்கும் உள்ள எண்கள் என்று சொல்லப்பட்டது. அதைப்பற்றி திரு. மோகன் இன்னொரு பிரச்சினை எழுப்புகிறார். நானும் அதைச் செயலாளர் மூலமாக அவைத் தலைவராகிய தங்களுக்கும் சொல்லியிருக்கிறேன், தாங்களும் சொல்லிவிட்டீர்கள். அதுபற்றி எதுவும் எழுதிக் கொடுக்காமல் அந்தப் பிரச்சினையைக் கிளப்பக் கூடாது; உரிமைப் பிரச்சினை என்ற பெயரிலோ அல்லது வேறு இந்த அவையினுடைய விதி முறைகளுக்கு உட்பட்டு எழுதிக் கொடுத்து விட்டுத்தான் திரு.மோகனாக இருந்தாலும் யாராக இருந்தாலும் பேசவேண்டும். திரு. மோகன் அவர்கள் அதைக் கூட புரிந்து கொள்ளாமல் ஒரு பார்லிமெண்ட் உறுப்பினராக இருந்தவர்—இப்படி எழுந்து சொன்னது சரியல்ல என்பதை நானும் ஒப்புக் கொள்கிறேன். எனவே எழுதிக் கொடுத்துவிட்டுப் பேசினால் அதைத் தாங்கள் அனுமதிக்கலாம்.

(ஆ) சேலம் சௌடேசுவரி கல்லூரி ஆசிரியர்களுக்கு அந்நிர்வாகம் இழைக்கும் கொடுமைகள் குறித்து.

திரு. கே. ரமணி: மாண்புமிகு தலைவர் அவர்களே, சேலத்தில் இருக்கும்படியான கல்லூரி சௌடேசுவரி கல்லூரி. அந்த ஆசிரியர்களுக்கு இழைக்கப்பட்டிருக்கிற சட்ட விரோதமான நடவடிக்கைகளைப் பற்றி அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவர வேண்டிய நிலைமை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது.

ஆசிரியர்களைப் பழிவாங்குகின்ற கொடுமை எட்டாண்டுகளாக அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவர்கட்கு ஏற்பட்டுள்ள வருமான நஷ்டம் 9 கோடி ரூபாய் என்று அவர்கள் சொல்கிறார்கள். யு.ஜி.சி. ஸ்கேல் அவர்களுக்கு அமுலாக்கப்படவில்லை. அதன் மூலமாகவும் அவர்களுக்கு 4 கோடி ரூபாய் நஷ்டம் வந்திருக்கிறது. அடக்கு முறை நடக்கிறது. சட்ட விரோதமான சஸ்பென்ட், துறை மாற்றம் போன்றவை நடக்கின்றன. துறைத்தலைவரையே பணியிலிருந்து நீக்குவதுபோன்ற சொல்லத்தகாத கொடுமைகள் அந்தக் கல்லூரியில் இருக்கின்ற ஆசிரியர்களுக்கு இழைக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கத்தின் சட்டதிட்டங்களைப் பூராவும் அவர்கள் தூக்கி எறிகிறார்கள் இந்த மோசமான நிலைமையை உடனடியாக மாற்றுவதற்கு அரசு முன் வந்து நடவடிக்கை எடுக்கவேண்டிய காலம் மீறிவிட்டது என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. ஆகவேதான் அந்த ஏ.யு.டி. ஆசிரியர்கள் அந்தக் கொடுமைகளைப் பொறுக்க முடியாமல்

அவர்கள் வந்து உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அவர்களுக்கு நியாயம் வழங்கக் கூடிய முறையில் இந்தக் கல்லூரியின் மீது உடனடியாக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் அரசை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. ரமணி அவர்கள் சேலத்தில் இருக்கக்கூடிய சௌடேசுவரி கல்லூரி விவகாரங்கள் குறித்துஇங்கே எழுப்பினார்கள். அது முன்கூட்டியே எனக்குத் தெரிவிக்கப்படவில்லை. இருந்தாலும் கூட, நீதிமன்றத்திலே ஒரு வழக்கு இருக்கிறது; அதிலே அரசாங்கத்தின் சார்பாகவும் எதிர்த்து வாதாடப்படுகிறது. நிர்வாகத்தின் சார்பாக வழக்கு தொடுத்து இருக்கிறார்கள். இப்படி வழக்கு இருக்கின்ற நேரத்தில் ஒரு தனி முடிவை அரசாங்கம் அவசரப்பட்டு எடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. இரண்டு தரப்பைச் சேர்ந்தவர்களும் என்னிடத்தில் கேட்கிறபோது வழக்கை முடித்துக் கொள்ளுங்கள் அதற்குப் பின்னால் அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்று நான் தெரிவித்திருக்கிறேன். இடையிலே போராட்டம் எல்லாம் தேவையா என்பதை அதை நடத்துகிறவர்கள் யோசித்துக்கொள்ள வேண்டும்.

3. கவன ஈர்ப்பு.

(அ) செங்கை அண்ணா மாவட்டம், செய்யூர் வட்டத்தில், கடலூரில் கடல் அரிப்பால் பாதிக்கப்பட்டுள்ள குடிசைப் பகுதிகளிலுள்ள ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு மாற்று ஏற்பாடு செய்வது குறித்து.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''செங்கை அண்ணா மாவட்டம், செய்யூர் வட்டம் கடலூரில் 500 ஆதி திராவிட குடும்பங்கள் வசிக்கும் குடிசைப் பகுதி, கடல் அரிப்பால் பாதிக்கப்பட்டுள்ளதால் அவர்களுக்கு மாற்று ஏற்பாடு செய்வது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக்கொண்டு வருகிறேன்.

10-25 மணி

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டு உள்ளது.